பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

EELA NADU

மலர் 19 ஐப்பசி 4 ஜுல்ஹஜ் 7 இதழ் 279

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 19-11-77

கோப்பி போன்று பாவிக்க

சோயாற்றின்

"சோயாற்றின்" உங்கள் களைப்பை நீக்குவதோடு தேக ஆரோக்கியத்தையும், நிறைவான புரதச்சத்தையும் தரவல்லது

அண்ணா தொழிலகம்

இணுவில்.

தொலைபேசி: 7412

## என்.சி.ஜி.ஈ. வினாத்தாள்கள் முன்னரே வெளியாகினவாம்

### பரீட்சையை நிறுத்துமாறு கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட, தேசிய பொதுத்தராதரப் பத்திர [9 ம் வகுப்பு] பரீட்சை வினாத்தாள்கள் முன்கூட்டியே வெளிவந்துவிட்டதால் அப் பரீட்சையை ரத்துச்செய்யுமாறு வடமாகாண ஆசிரியர்சங்கத் தலைவர் திரு எஸ். கே. சுந்தரலிங்கம் கோரியுள்ளார்.

வடபகுதி வித்தியாதிபதிக்கு அவர் அனுப்பியுள்ள கடிதத்தில் கூறப்பட்டிருப்பதாவது:

இப் பரீட்சையில் விஞ்ஞானபாட வினாத்தாள் முன்கூட்டியே வெளியாகிவிட்டது. இதனால் மாணவர்கள் சகல

(6-ம் பக்கம் பார்க்க)

# பொருளாதார விருத்திக்கு இன சமாதானம் அவசியம்

## 'பட்ஜட்' விவாதத்தில் 'அமிர்' வலியுறுத்து

[கொழும்பு]

"ஒரு நாட்டின் பொருளாதாரம் அபிவிருத்தியடையவேண்டுமாயின் அங்கு கைத்தொழில் சமாதானம் நிலவவேண்டும்; கைத்தொழில் சமாதானம் ஏற்படவேண்டுமானால் நாட்டில் வாழும் இனங்களிடையே சமாதானம் மிளிரவேண்டும். இலங்கையின் சிறுபான்மையினரான தமிழ்மக்கள் இரண்டாந்தரப் பிரஜைகள் என்ற உணர்வு இருக்கும்வரை இந்த நாட்டில் பொருளாதார அபிவிருத்தி ஏற்படவேமாட்டாது. இந்நிலை ஒழிய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்"

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் ஐக்கியதேசியக்கட்சியின் முதலாவது வரவு-செலவுத் திட்டம் மீதான விவாதத்தை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் கூறினார்.

திரு. அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

இந்த பட்ஜட் 'சிங்கப்பூர் அரசைப் பின்பற்றி தயாரிக்கப்பட்டுள்ளது. ஆனால் சிங்கப்பூரில் உள்ள அரசியல்நிலைமை இங்கு இல்லை.

### சிங்கப்பூரில் செல்வம் கொழிக்கிறது

சிங்கப்பூரில் இனங்களுக்கிடையே பாரபட்சம் கிடையாது. அங்குள்ள நான்கு மொழிகளுக்கும் சமஅந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது எனவே தான் அங்கு செல்வம் கொழிக்கிறது.

ஆனால் இலங்கையில் சிறுபான்மை இனம் பாரபட்சமாக நடத்தப்படுகிறது. கடந்த 30 ஆண்டுகளாக முக்கிய கைத்தொழில் அபிவிருத்தி எதுவும் தமிழ் பகுதிகளில் மேற்கொள்ளப்படவில்லை.

### காங்கேசன் துறைமுகம்...

திரு. டட்லி காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட காங்கேசன் துறைமுகம், மயிலிட்டி மீன்பிடித் துறைமுகம், அச்சுவேலி கைத்தொழில் பேட்டை ஆகியன ஆரம்பிக்கப்பட்ட நிலையிலேயே இன்றும் இருந்து வருகின்றன.

காங்கேசன் துறைமுகத்தை அபிவிருத்தி செய்தால் காங்கேசன் சீமெந்து உற்பத்திச் செலவில் மூன்றில் ஒருபகுதி குறையும்.

வேலையற்ற வாலிபர்களுக்கு 50 ரூபா வழங்குவதில் அரசு அரசியல், இன பாரபட்சம் காட்டக் கூடாது.

### நிதி அமைச்சர் உறுதி

அப்போது குறுக்கிட்ட நிதி அமைச்சர் திரு. ரொனிடிமெல் இதுவிஷயத்தில் எதுவித பாரபட்சமும் காட்டப்படமாட்டாது என்றும் உதவி அரசாங்க அதிபர், சமூக சேவைப்பகுதியினர் ஆகியோரின் ஆலோசனையின் பேரிலேயே இந்த அலவன்ஸ் வழங்கப்படும் எனவும் உறுதி கூறினார்.

திரு. அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

(6ம பக்கம பார்க்க)

## சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

நேற்று கொழும்பில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட 639-வது இலங்கை தேசிய சுவீப்பில் பரிசு பெற்ற முதல் மூன்று டிக்கெட்டுகளின் விபரம்:

1-வது பரிசு:

02 U 0874

ரூபா 1,000,000

2-வது பரிசு:

23 V 0220

ரூபா 40,000

3-வது பரிசு:

43 N 0876

ரூபா 10,000

## தமிழ் ஈழ பொருளாதாரம்

### எதிர்க்கட்சித் தலைவர் சவால்

[கொழும்பு]

'தமிழ் ஈழம்' அமைக்கப்பட்டால் எமது பொருளாதாரத்தை நாமே அபிவிருத்தி செய்து கொள்வோம். எங்களிடம் போதிய வளம் இருக்கிறது"

இவ்வாறு திரு. அமிர்தலிங்கம் பேரவையில் கூறினார்.

திரு. அமிர்தலிங்கம் உரை நிகழ்த்தியபோது சபாநாயகர் திரு. ஆனந்ததிஸ்ஸ டி அல்விஸ் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இங்குள்ள உறுப்பினர் ஒருவர் பிரேரணை ஒன்றை பேரவையில் சமர்ப்பித்து நம் பிரிந்து செல்ல அனுமதித்தால் எமது பொருளாதார

(6-ம் பக்கம் பார்க்க)

## 3 ரூபாவுக்குச் சீனி உடன் அமுல்

(கொழும்பு)

பங்கீட்டுக்குப் புறம்பான சீனியின் விலைக்குறைப்பு நேற்று வெள்ளிக்கிழமை நள்ளிரவு முதல் அமுலுக்கு வந்துள்ளது என்று நிதி திட்டமிடல் அமைச்சர் திரு ரொனி டி மெல் நேற்று தேசிய அரசுப் பேரவையில் மாலை 5-44-க்கு அறிவித்தார்.

அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதலே இவ்விலைக் குறைப்பை அமுல் செய்ய ஏற்கனவே திட்டமிட்டிருந்த போதிலும் எதிர்வரும் முக்கிய பண்டிகைகளை முன்னிட்டு பிரதமரின் சம்மதத்துடன் இவ்விலைக்குறைப்பு உடன் அமுல் செய்யப் படுகின்றது என்றும் கூறிய திரு. மெல் 3 ரூபாவுக்கு சீனி விற்கப்படுவதால் தேநீர், குளிர்பானம், பணிஸ் ஆகியவற்றின் விலைகளும் குறையும் என்றும் கூறினார்

கூப்பனுக்கு ஒரு றாத்தல் சீனி இவ்வருடம் முடியும்வரை சகலருக்கும் 72 சதப்படி வழங்கப்படும் என்றும் திரு, மெல் கூறினார். (ம-இ)

### வரலாற்றில் முதல்தடவையாக

## 'பட்ஜட்' விவாதத்தை தமிழில் ஆரம்பித்தார் அமிர்

[கொழும்பு]

ஐ. தே. கவின் முதலாவது பட்ஜட் மீதான விவாதத்தை பேரவையில் நேற்று திரு. அ. அமிர்தலிங்கம் தமிழில் ஆரம்பித்துவைத்து சுமார் இரண்டரை மணித்தியாலம் வரை உரையாற்றினார்.

இலங்கை வரலாற்றில் ஒரு தமிழ்பேசும் எம். பி. தமிழில் வரவுசெலவுத் திட்ட விவாதத்தை ஆரம்பித்தது இதுவே முதல்தடவையாகும்.

திரு. அமிர்தலிங்கம் தமிழில் உரையாற்றியபின் மீண்டும் தமது உரையை ஆங்கிலத்தில் நிகழ்த்தினர்.

இவர் பேச ஆரம்பித்ததும் உறுப்பினர்கள் கரகோஷம்செய்து வரவேற்றனர். (ம-இ)

## 'பட்ஜட் கஷ்டங்கள் தற்காலிகமாகவே இருக்கும்'

### — நிதிமந்திரி

[கொழும்பு]

ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய வரவு செலவுத் திட்டம் நாட்டின் அபிவிருத்தியையும் வேலைவாய்ப்பையும் கருத்திற் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. இந்த வரவுசெலவுத் திட்டத்தினால் பொதுமக்களில் எவருக்காவது கஷ்டம் ஏற்படுமானால் அது தற்காலிகமானதாகவே இருக்கும்.

இவ்வாறு திட்டமிடல் அமைச்சர் திரு.ரொனி.டிமெல் தமது புதிய 'பட்ஜட்' பற்றித் தெரிவிக்கையில் கூறினார்

இது தொடர்பாக திரு மெல் நாட்டுமக்களுக்கு விடுத்த செய்தியில் மேலும் கூறியுள்ளதாவது:

மந்தகதியில் உள்ள நாட்டின் பொருளாதார முறை முற்றாக மாற்றி அமைக்கப்படவேண்டும்!

கடந்த 7 ஆண்டு காலத்தில் மேற்கொள்ளப்பட்ட தவறுகளினால் ஏற்பட்டுள்ள மோசமான பிரச்னைகளுக்கு தற்காலிக நடவடிக்கைகள் எதுவும் பயனளிக்கமாட்டாது.

[6-ம பக்கம பார்க்க]

## JAFFNA COLLEGE TECHNICAL INSTITUTE

Starting a new six months welding course in 1978, followed by a six months advanced welding course. Also a few Trade Apprentices will be taken in 1978 on Building work.

Further particulars from Director J. C. T. I. Vaddukoddai.

7713

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

வல்லிபரம் சின்னக்கண்டு, தெல்லிப்பழை தென்மேற்கு. வாதி

இல: ஈடு/1340

எதிராக

குஞ்சர் வேலுப்பிள்ளை, தெல்லிப்பழை தென்மேற்கு. பிரதிவாதி

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தின் MB/1340-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப் படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1977-ம் ஆண்டு நவம்பர் மாதம் 28-ந் திகதி (28-11-1977 திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னல் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல்வட்டி · ரூபா 4575/-. 23-7-1976 தொடக்கம் 12-11-1976 வரைக்கும் ரூபா 3000/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 453/65 இதில் செலவு தொகையில் செலுத்தப்பட்ட ரூபா 200/- கழித்து மிகுதி.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பழை கோவிற்பற்று தெல்லிப்பழை மேற்கிறை திருமாலவுடை அல்லது திருமாலயுடை நிலப் பரப்பு அறுபத்தெட்டு (நில. பர. 68) இதில் சீதனமாகவும் நன்கொடையாகவும் கொடுக்கப்பட்ட நிலப்பரப்பு இருபத்தி நாலுபோக எஞ்சிய நிலப்பரப்பு நாற்பத்திநாலு (நில. பர 44) இந்த நிலபரப்பு 44க்கும் எல்லை கிழக்கு சபாரத்தினம் பெண் சுந்தரம்பிள்ளைக்கும் பொன்னம்பலம் சுப்பிரமணியத்துக்கும் உரிய ஆதனங்கள். வடக்கு பொன்னம்பலம் சுப்பிரமணியத்துக்கும் வன்னித்தம்பி பெண் பொன்னுப்பிள்ளைக்கும் பங்காளருக்கும் பொன்னம்பலம் நரசிங்கப்பிள்ளைக்கும் உரிய ஆதனங்கள், மேற்கு வேலுப்பிள்ளை கந்தையாவுக்கும் முருகேசர் பொன்னம்பலத்துக்கும் உரிய ஆதனங்கள், தெற்கு சாலை ஆறுமுகத்திஞதனம். இவ்வெல்லைப்படி இதற்கூடாகப் போகும் ரோட்டுக்கு விடப்பட்ட நிலம் புறநீங்கலாக இதடங்கலும்.

க. சிவஸ்கந்தா
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும் மதிப்பாளரும்.

நாகேந்திரமடம்,
வட்டுக்கோட்டை,
21-10 77.

7707

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

சின்னத்துரை கந்தசாமி கைம்பெண் மனோன்மணி, வட்டுக்கோட்டை மேற்கு. வாதி

இல. ஈடு/15128

எதிராக

1. கதிரவேலு பாலச்சந்திரனும் பெண்
2. தங்கரத்தினமும் இருவரும் வட்டுக்கோட்டை கிழக்கு.

பிரதிவாதிகள்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தின் MB/15128-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1977-ம் ஆண்டு நவம்பர் மாதம் 30-ந் திகதி (30-11-1977) புதன் கிழமை முற்பகல் 10 மணியளவில் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னல் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல்வட்டி ரூபா 3187/-ம் 1-12-1975 தொடக்கம் இறுக்கப்படும்வரை ரூபா 2000/-க்கு 10 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 425/60.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் மேற்குப்பகுதி. வட்டுக்கோட்டை கோவிற்பற்று வட்டுக்கோட்டை மேற்கு இறை ''வளப்புலம்'' பர நில இலா நாலே கால் (4¼) நிலமும் வீடும் எல்லை கிழக்கு நாகலிங்கம் நவரத்தினத்திற்கும் வயித்திலிங்கம் கைம்பெண் செல்லத்தினுரிமைக்காரருக்கும் உரிய ஆதனங்கள், வடக்கு அம்பலவாணர் மருதப்பிள்ளை பெண் இரத்தினத்தின் ஆதனம், மேற்கு சுந்தரம்பிள்ளை முருகேசபிள்ளையின் ஆதனம், தெற்கு வயித்திலிங்கம் கைம்பெண் செல்லத்தின் உரிமைக்காரரின் ஆதனமும், ஒழுங்கையும் குறித்த கிணற்றில் வடக்கெல்லைக்காணிக்கு நாலில் ஒரு (¼) பங்கும் தூர்வை வழிவாய்க்கால் புறநீங்கலாக லாகவும் குறித்த கிணற்றில் தெற்கெல்லைக் காணிக்குரிய பங்கும், தூர்வை வழிவாய்க்கால் பாவிப்புரித்து புறநீங்கலாகவும் இன்னும் இக்காணியில் ஆறு முழ அகலங்கொண்ட ஒழுங்கை மேற்கு வேலிபருகே புறநீங்கலாக இதடங்கலும்.

இதன் பதிவு யீ 432/29

க. சிவஸ்கந்தா,
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும் மதிப்பாளரும்.

நாகேந்திரமடம்,
வட்டுக்கோட்டை,
25-10-77.

7706


## Jaffna Law Acc. demy

யாழ். சட்டக் கல்வி நிலையம்

சட்ட முதற் தேர்வு (First in Laws 1978)
சட்ட இறுதித் தேர்வு (L.L.B)
(தமிழ் மொழி மூலம்)

- புதிய வகுப்புகள் 8-1-1978ல் ஆரம்பமாகின்றன.
- க. பொ. த. (உயர்தரம்) சித்தியடைந்த எவரும் விண்ணப்பிக்கலாம்.
- விரிவுரைகள் வார இறுதி நாட்களில் நடைபெறும்.
- கடந்த வருடங்களில் மிகச் சிறந்த பெறுபேறுகள்.

விபரங்களுக்கு:

அதிபர்
யாழ். சட்டக் கல்வி நிலையம்,
மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

7716


## கோட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

MB/ 458

1. வேலுப்பிள்ளை செல்வரத்தினம் பெண்
2. பரமேஸ்வரியும் மல்லாகம்

வழக்காளிகள்

எதிராக

1. வேலுப்பிள்ளை அப்பையாவும் பெண்
2. கண்மணியும் சுன்னாகம்

எதிராளிகள்

மல்லாகம் டிஸ்திறிக் கோட்டில் MB/458ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1977ம் ஆண்டு மார்கழி மாதம் 9ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10-30 மணி (9-12-77) தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

மேற்குறித்த எதிராளிகள் குறித்த 2ம் வழக்காளிகளுக்கு ரூபா 11,676 67 சதத்தையும் மேலும் முதல் 10,000/-க்கு வருடமொன்றுக்கு நூற்றுக்கு 12வட்டி வீதம் வழக்கு அனைத்த திகதியாகிய 1974ம் ஆண்டு மார்கழி மாதம் 10-ம் திகதியிலிருந்து தீர்வைத்திகதியாகிய 1975ம் ஆண்டு ஐப்பசி மாதம் 17ந் திகதி வரையுமான வட்டியும் அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை சட்டவட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5 வீதவட்டியும் வழக்குச் செலவு ரூபாய் 631-30 சதம் கொடுக்க வேண்டியிருப்பதாலும் (கொடுக்கப்பட்ட தொகை ரூபா 300/-)

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப்பகுதி உடுவிற் கோயிற்பற்று சுன்னாகம் இறை கதிரவலை நிலப்பரப்பு 4 குழி 17¼ வீடும் கிணறும் செய்பயிர் வான் பயிர்களும் இதற்கு எல்லை கிழக்கு கையொழுங்கை வடக்கு வேலுப்பிள்ளை கைம்பெண் தெய்வானைப்பிள்ளையின் ஆதனம் மேற்கு வேலுப்பிள்ளை ஐயாத்துரைக்குரிய ஆதனமும் கையொழுங்கையும் தெற்கு றோட்டு. இவ்வெல்லைப்படி இதடங்கலும்.

சி. செ. பாலசிங்கம்
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்

அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.
1-11-77.

7705

## கோட்டு விற்பனவு விளம்பரம்

ஜோக்கிம்பிள்ளை யாக்கோப்பு, நாரந்தனை வடக்கு ஊர்காவற்றுறை. வாதி

இல: ஈடு/14425

எதிராக

1. ஆறுமுகம் திருநாவுக்கரசு
2. பெண் கனகம்மா — இருவரும் புளியங்கூடல், ஊர்காவற்றுறை.

பிரதிவாதிகள்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தின் ஈடு 14425ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த விற்பனவுக்கான அதிகாரத்தின்படி பின்னல் விபரிக்கப்படும் 2 துண்டுக் காணிகளை 1977ம் ஆண்டு கார்த்திகை மாதம் 24ம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணி தொடக்கம் முறையே அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னல் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல்வட்டி ரூபாய் 4125/ம் 19-6-1974 தொடக்கம் 14-8-1975 வரைக்கும் ரூபா 3248/-க்கு 12வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 574-19 சதமும்.

### ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறை கோவிற்பற்று கரம்பன்இறை 'கிணற்றடி தணுவிலும் தணுவில்' நெற்பரப்பு 20½. இதில் தெற்குப்பக்கமாக நெற்பரப்பு 10 நீக்கி மிகுதி வடக்குப்பக்கமாக நெற்பரப்பு 10½யும் கிணறும் இதற்கெல்லை கிழக்கும் வடக்கும் ஒழுங்கை மேற்கு ஆறுமுகம் பெண் தங்கம்மாவினுதனம் தெற்கு அதன்மீதி ஆதனம் இதடங்கலும்.

2. மேற்படி சரவணைஇறை 'குமிளந்தனை வயல்' நெற்பரப்பு. 33. இதில் மேற்குப்பக்கமாகவும் கிழக்குப் பக்கமாகவும் முன்அறுதி விற்ற நெற்பரப்பு 19 குளி 8½ நீக்கி மீதியான காணித்துண்டு நெற்பரப்பு 13 குளி 3½. இந்த நெற்பரப்பு 13 குளி 3½க்கும் எல்லைகிழக்கு மாணிக்கம் கைம்பெண் யோகம்மாவினுதனம் வடக்கு ஒழுங்கை மேற்கு முருகேசு பெண் இராசம்மாவினுதனம் தெற்கு எட்வேட் கைம்பெண் கிறேசின் ஆதனம்.

நீ. அன்ரனிப்பிள்ளை
விற்பனவுக் கொமிஷனர்

22, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

7702

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

5 ஸ்ரீ 7745 இலக்க 150 C. C.-S X இத்தாலியன் ஸ்கூட்டர் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: வே. நாகலிங்கம், புளியங்கூடல், ஊர்காவற்றுறை.

7682

கைதடி - கண்டி வீதியில் அமைந்திருக்கும் இரும்புக்கடையொன்று சகல தளபாடங்களுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: கைதடி ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ், கைதடி.

7715

### சேவை

வவுனியாப் பகுதியில் பனம் விதை நாட்டி மரம் உண்டாக்க விரும்புபவர்கள் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் மன்றத்தில் பனம் விதைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதை யாழ்ப்பாணம் ''மில்க்வைற்'' ஸ்தாபனத்தார் அறியத்தருகின்றார்கள்.

7712

### தேவை

பாண் தயாரிப்பதில் அனுபவம் உள்ளவர் உடனடியாகத் தேவை. விபரங்கட்கு- இலட்சுமி பேக்கரி, அச்சுவேலி.

7704

### நன்றி நவிலல்

நவம்பர் ஆறும் திகதி சிவபதமடைந்த திருமதி சின்னையா மாணிக்கம் அவர்களின் மரணச் சடங்குகளில் கலந்துகொண்ட, அனுதாபச் செய்திகள் அனுப்பிய சகல உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் இதயபூர்வமான நன்றியறிதலை தெரிவித்துக் கொள்கிறோம். திருமதிகள் தங்கரத்தினம் கந்தசாமி, தில்லைமலர் பசுபதியும் குடும்பத்தினரும் உடுவில்.

7714

## யாழ்ப்பாண மாநகரசபை

### கூறுவிலை

யாழ். நகரமண்டபத்தை அடுத்துள்ள மின்சாரத் தூண்கள் தயாரிக்கும் இடத்தில் இருந்து யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குட்பட்ட வேலைத்தலங்களுக்கு 28 அல்லது 30 அடி நீளமுள்ள மின்சாரத் தூண்களை ஏற்றி இறக்குவதற்கான கூறுவிலைகள் எதிர்வரும் 24-11-77 வியாழக்கிழமை நண்பகல் 12-00 மணி வரை எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்.

தூணுக்கு இன்ன தொகை கேட்கப்படுகிறதென்பதைக் கூறுவிலைகள் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

கூறுவிலைகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் ''மின்சாரத் தூணை ஏற்றி இறக்குவதற்கான கூறுவிலைகள்'' எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்

க. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

நகரமண்டபம்,
யாழ்ப்பாணம்,
17-11-77.

7711

## வருடாந்த திருவிழா

(வவுனியா)

வவுனியா கந்தசுவாமி கோவிலில் வருடாந்த ஸ்கந்த சஷ்டித் திருவிழாவும் சூரன் போரும் நடைபெற்றது. நேற்று முன்தினம் திருக்கல்யாண வைபவமும் நடைபெற்றது.

# எகிப்திய ஜனாதிபதி இன்று இஸ்ரேல் விஜயம்!

# இதனை எதிர்த்து இரு அமைச்சர்கள் ராஜினாமா!!

## ஜெருஸலத்தில் சந்திப்பு

### பார்லிமெண்டிலும் உரையாற்றுவார்

கெய்ரோ, நவ. 18

**எகிப்திய ஜனாதிபதி அன்வர் சதாத் நாளை (சனிக்கிழமை) இஸ்ரேலுக்கு விஜயஞ்செய்வதைத் தொடர்ந்து எகிப்திய அமைச்சரவையில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.**

ஜனாதிபதி அன்வர் சதாத் விஜயஞ்செய்வது உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்ட சில மணி நேரத்தில் எகிப்திய வெளிநாட்டு அமைச்சர் யோமி ராஜினாமாச்செய்தார். இவரது ராஜினாமாவை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி உடனடியாக மொகமட் றியாத்தை பதில் வெளிநாட்டமைச்சராக நியமித்தார். ஆனால் நியமனம் வழங்கப்பட்ட சில மணி நேரத்தில் இவரும் ராஜினாமாச்செய்துவிட்டாரார்.

மத்திய கிழக்குப் பிரச்னையைத் தீர்த்துவைக்கும்பொருட்டுத் தம்முடன் நேரில் பேச்சுவார்த்தை நடத்த ஜெருசலத்துக்கு வருமாறு எகிப்திய ஜனாதிபதியை இஸ்ரேலியப் பிரதமர் பெகின் அழைத்திருந்ததும், இந்த அழைப்பை எகிப்திய ஜனாதிபதி ஏற்றுக்கொண்டதும் தெரிந்ததே.

இஸ்ரேலுக்கு விஜயஞ்செய்வது பற்றி ஜனாதிபதி அன்வர் சதாத் நேற்று உத்தியோக பூர்வமாக அறிவித்தார்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இஸ்ரேலிய விஜயத்தை எகிப்திய ஜனாதிபதி நாளை மேற்கொள்வார். அங்கு அவர் இரண்டு தினங்கள் தங்கியிருப்பார்.

இஸ்ரேலியப் பார்லிமெண்டில் உரை நிகழ்த்தும் எகிப்திய ஜனாதிபதி, ஜெருசலத்தில் இஸ்ரேல் தலைவர்களுடன் மத்திய கிழக்கு நெருக்கடி குறித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்துவார்.

### சிரியா எதிர்ப்பு

அன்வர் சதாத்தின் இஸ்ரேலிய விஜயம் குறித்து சிரியா ஜனாதிபதி ஆட்சேபம் தெரிவித்துள்ளார்.

## தி. மு. க.- ஜனதா தொண்டர்கள் விடுதலை!

பெங்களூர், நவ, 18

பெங்களூரில் இந்திராகாந்தியின் தமிழக விஜயத்தின் போது கறுப்புக்கொடிகாட்டிய தி. மு. க. - ஜனதா தொண்டர்களை பெங்களூர் நீதிமன்றம் விடுதலைசெய்துள்ளது.

இவர்கள் மீது மாநில அரசு சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படவில்லையெனவும் அவசியம் ஏற்படும்பட்சத்தில் இவர்கள் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டுமென்றும் தீர்ப்பளிக்கப்பட்டது.

[செ]

## சிவாஜி, மஞ்சுளா நன்கொடை

சென்னை, நவ. 18

தமிழ்நாட்டில் ஏற்பட்ட வெள்ளம், புயலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நடிகர் திலகம் சிவாஜி கணேசனும் நடிகை மஞ்சுளாவும் நிதி உதவி வழங்கியுள்ளனர்.

முதலமைச்சர் நிவாரண நிதிக்கு சிவாஜிகணேசன் 15,000 ரூபாவும் மஞ்சுளா 10,000 ரூபாவும் நிதிவழங்கியுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களின் நலனுக்காக திராவிட முன்னேற்றக்கழகத்தை சேர்ந்த பார்லிமெண்ட், சட்டப் பேரவை, சட்டமேலவை உறுப்பினர்கள் தங்களின் ஒரு மாதச் சம்பளத்தை வழங்குகின்றனர்கள்.

## போட்டி

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி வட்டாரப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற ஐ. நா. தின போட்டிகளில் வெற்றி பெற்றோர் விவரம்:

பேச்சுப்போட்டி: எஸ். கே. தவராசா (கிளிநொச்சி மகா வித்தியாயயம்), சு. செபயோச ராகினி (கனகபுரம் அ. த. க. பாடசாலை கிளிநொச்சி)

கட்டுரைப்போட்டி: எஸ். சுகுமார் (கிளிநொச்சி மகா வித்தியாலயம்), எம். புஸ்பராணி (கிளிநொச்சி மகாவித்தியாலயம்.

(இ)

### அந்நியச்செலாவணி மோசடி:

## எம். ஜி. ஆர். மீதானவிசாரணை அடுத்த மாதம் ஆரம்பம்!

புதுடில்லி, நவம்பர் 18

தமிழ்நாட்டின் முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனுக்கும் அவரது எம். ஜி. ஆர். பிக்சர்ஸ் நிறுவனத்துக்கும் எதிரான அந்நியச் செலாவணி மோசடி சம்பந்தமான விசாரணையை மத்திய அரசு அடுத்த மாதம் ஆரம்பிக்கும்.

இவ்விசாரணை, 1972ம் ஆண்டு திருமதி இந்திராகாந்தியினால் தடைசெய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. முன்னைய விசாரணைகள் சம்பந்தமான 'பைல்'கள் எடுக்கப்பட்டதும் இதுபற்றிய புதிய விசாரணை ஆரம்பமாகும் என்று உயர் அதிகாரிகள் முன்னர் தெரிவித்துள்ளனர்.

''உலகம் சுற்றும்வாலிபன்'' திரைப்படம் சம்பந்தமான படப்பிடிப்புகளை இந்தியஅரசு அனுமதி வழங்காத இடங்களில் எடுத்தது; கெய்ரோவில் படப்பிடிப்பு நடைபெற்ற போது உல்லாசப் பிரயாணம் செய்வதற்கு வாடகை விமானங்களை வாடகைக்குஅமர்த்தியதும் ஆகியவை மூலம் அந்நியச் செலாவணி சட்டவிதிகளை அவர்மீறியுள்ளனராம்.

[செ]

### புதிய காங்கிரஸ் தலைவர் தெரிவு:

## விசேஷ கூட்டம் ஒத்திவைப்பு!

புதுடில்லி, நவ. 18

புதிய காங்கிரஸ் தலைவரைத் தெரிவுசெய்யும் முயற்சிகள் இப்பொழுது கைவிடப்பட்டுள்ளன.

புதிய காங்கிரஸ் தலைவரைத் தெரிவுசெய்வதற்காக அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் விசேஷ கூட்டத்தை அடுத்த சில தினங்களில் கூட்டுவதென்று பெரும்பாலான காங்கிரஸ் ஆதரவாளர்கள் முடிவுசெய்து, இது சம்பந்தமாகக் காங்கிரஸ் தலைவர் திரு. பிரமானந்த ரெட்டியின் சம்மதத்தையும் பெற்றிருந்தனர்.

நேற்று திருமதி இந்திரா காந்தியின் இல்லத்தில் மூன்று மணி நேரம் வரை நடைபெற்ற கூட்டத்தில் ஏராளமான காங்கிரஸ் ஆதரவாளர்கள் கலந்துகொண்டனர். இக்கூட்டத்தின் முடிவில், புதிய தலைவரைத் தெரிவுசெய்வதற்கான அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தைக் கைவிடுவதென்று முடிவுசெய்யப்பட்டது. காங்கிரஸ் தலைவர் திரு, ரெட்டியும் இந்த முடிவை நேற்று ஊர்ஜிதம் செய்திருந்தார்.

காங்கிரஸ் கமிட்டியின் விசேஷ கூட்டம் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளதா என்று திருமதி இந்திரா காந்தியை நிருபர்கள் கேட்டபோது ''வெகு நாட்களுக்கு அல்ல'' என்று அவர் பதில் அளித்தார்.

### தென்னாபிரிக்கதலைவர்பிக்கோகொலை

## குற்றவாளிகளுக்கு மன்னிப்புக் கிடைக்குமா?

மபூட்டோ, நவ. 18

பிரபல தென்னாபிரிக்க இளைஞர் தலைவர் ஸ்டீவ் பீக்கோ சிறையில் கொலை சய்யப்பட்டதற்குப் பொறுப்பானவர்கள் தண்டனையிலிருந்து தப்புவார்களா?

இளைஞர் தலைவர் பிக்கோவின் மரணம் பற்றி தற்போது நடைபெறும் நீதிமன்ற விசாரணைகளை அவதானிக்கும் போது, கொலைகாரர்கள் தண்டனையிலிருந்து தப்புவதற்கு இடமுண்டு என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

நீதிமன்ற விசாரணைகளின் போது அரசாங்க தரப்பில் உரை நிகழ்துகையில், பிக்கோவின் மரணத்தில் பொலிஸாருக்கு எதுவித சம்பந்தமுமில்லை என்றுகூறியுள்ளதைத் தொடர்ந்தே, இவ்வாறான ஒரு கருத்து அரசியல் அவதானிகள் மத்தியில் நிலவி வருகின்றது.

இவ்வாண்டு ஆகஸ்ட் மாதம் பொலிசாரால் கைதுசெய்யப்பட்ட தலைவர் பிக்கோ ஜோஹானஸ்பேர்க் சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் அடைக்கப்பட்ட இருவார காலத்தின் பின்னர் இவர் மரணமானார்.

சிறை அதிகாரிகளின் கெடுபிடியை எதிர்த்து வர் நடாத்திய இருவாரகால உண்ணாவிரதத்தைத் தொடர்ந்தே இவர் மரணமானார் என்று சிறை அதிகாரிகள் கூறியபொழுதிலும், வைத்தியப் பரிசோதனையின் போது, மண்டையில் ஏற்பட்ட படுகாயத்தினாலேயே பிக்கோ மரணமடைந்தார் என்று அறிவிக்கப்பட்டது.

தென்னாபிரிக்கச் சிறையில் மரணத்தைத் தழுவியவர்களில் ஸ்டீவ்பிக்கோ 21வது கைதியாவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### தமிழ்நாட்டில்

## புயல் அபாயம் நீங்கவில்லை!

### மீட்பு வேலைகளில் இராணுவம் ஈடுபட்டது

சென்னை, நவ, 18

தமிழ்நாட்டில், புயலினாலும் பெருவெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்ட மக்களை ரயில்வே அமைச்சர் திரு மதுதண்டவதே விமானத்தில் சென்று பார்வையிட்டார். இவருடன், பத்திரிகை நிருபர்கள் கோஷ்டியொன்றும் சென்றிருந்தது.

புதுடில்லி திரும்பும் வழியில் சென்னையில் நேற்று நிருபர்கள் மத்தியில் அமைச்சர் பேசுகையில், தமிழ்நாட்டில் வெள்ளத்தினாலும் புயலினாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மத்திய அரசு தனது அதிகாரத்துக்குட்பட்ட எல்லாவற்றையும் செய்யும் என்றும், தமிழ்நாட்டைக் காப்பது, பாரதத்தைக் காப்பது போலாகும் என்றும் கூறினார்.

பாதிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து மக்களை அப்புறப்படுத்துவதில் பாரத இராணுவத்தினர் முழுவேகத்தில் செயல்பட்டு வருகின்றனர். நேற்று வரை ஆபத்திலிருந்த 651 பேரை இராணுவத்தினர் பாதுகாத்தனர்.

### புயல் அபாயம் நீங்கவில்லை

தமிழ்நாட்டின் கரையோரப் பகுதிகளில் நேற்று புயல்வீசாத போதிலும் இன்றும் நாளையும் புயல் வீசலாம் என்று எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது. இதற்கிணங்க தமிழ்நாட்டின் கரையோரப்பகுதிகளிலிருந்து மக்கள் வெளியேறி வருகின்றனர். சில இடங்களில் கடல்நீர் வீடுகளில் புகுந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

## யாழ். நகரில் கருணாநிதி ஆதரவு சுவரொட்டிகள்

(யாழ்ப்பாணம்)

கலைஞர் கருணாநிதியை விடுதலை செய்யுமாறு கோரும் சுவரொட்டிகள் யாழ். நகரின் பல இடங்களிலும் ஒட்டப்பட்டுள்ளன. நீல, சிவப்பு மையினால் எழுதப்பட்ட இச் சுவரொட்டிகள் ஆங்கிலத்திலும் தமிழிலும் உள்ளன.

''தி. மு. க. தலைவரை உடனே விடுதலைசெய்க'' ''உலக தமிழர் தலைவர் கலைஞர் கருணாநிதியை விடுதலைசெய்க'' போன்ற வாக்கியங்கள் அச் சுவரொட்டிகளில் பொறிக்கப்பட்டுள்ளன.

(கி)

தமிழ்நாடு புயலினால்

# 5 நாள் கடலில் தத்தளித்து வல்வைவந்த தமிழகமீனவர்

## ஐந்துநாட்களும் மழைநீரையே அருந்தினார்

(நெல்லியடி)

தமிழ் நாட்டைச் சேர்ந்த கடற்றொழிலாளரான அ.ராஜமாணிக்கம் (வயது 33) அண்மையில் ஏற்பட்ட புயலினால் 5 தினங்கள் கடலில் தத்தளித்த பின், வல்வெட்டித்துறையை வந்தடைந்துள்ளார். இவருடன், மீன்பிடிக்கப்புறப்பட்ட மற்றும் ஐவர் பற்றிய எவ்வித தகவலும் இல்லை.

அன்னை வேளாங்கண்ணி, நாகபட்டினத்தைச் சேர்ந்த இவர் தொண்டமனாறு காட்டுப்புலத்தைச்சேர்ந்த முத்தையா விசுவரத்தினத்தினால் காப்பாற்றப்பட்டு, தற்பொழுது மந்திகை ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வருகிறார்.

மயக்க நிலையில் அஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இவர், மீண்டும் சுயநினைவு பெற்றுள்ள போதிலும், பேசக்கூடிய நிலையை அடையவில்லை.

எழுத்துமூலமே இவர் சம்பவம் பற்றி விபரித்துள்ளார். வலையில் இருக்கும் சக்கையை தன் அரையில் கட்டியபடியினால் தான் 5நாளும் கடலில் மிதக்கக்கூடியதாக இருந்ததென்று இவர்தெரிவிக்கிறார். 5நாட்களும், கடல்நீரையும், மழைநீரையும் மட்டும் அருந்தியே காலத்தைப் போக்கினர்.

வல்வெட்டித்துறை பொலிஸார் மேற்படி நபர் சம்பந்தமாக இந்தியத் தூதுவராலயத்திற்கு அறிவித்துள்ளார்கள்.

## குளவிக்கு தீவைக்க முயன்றவர் மரத்திலிருந்து விழுந்து மரணம்

(யாழ்ப்பாணம்)

தென்னையிலிருந்த குளவிக் கூட்டிற்கு தீமூட்ட முயற்சித்த ஒருவர் குளவிகள் கொட்டியதனால் வலி தாங்காமல் மரத்திலிருந்து தவறி விழுந்து மரணமானார்.

மட்டுவிலைச் சேர்ந்த தம்பையா காசிப்பிள்ளையின் மரணவிசாரணையில் மேற்கண்ட விபரம் தெரியவந்தது. யாழ். மரணவிசாரணை அதிகாரி திரு எஸ் கனகரத்தினம் மரணவிசாரணை நடத்தினார்.

மரத்திலிருந்து விழுந்ததும் உடனடியாக யாழ் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு 3 தினங்களுக்குப் பின் மரணமானார். மரணவிசாரணை அதிகாரி பிரேதபரிசோதனைக்கு உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்தார். (க)

## இடமாற்றம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலை வைத்திய பொறுப்பதிகாரியாக டாக்டர் நி. கணநாதன் நியமிக்கப்பட்டுள்ளார். இதுவரை இவ்வைத்தியசாலையில் வைத்தியபொறுப்பதிகாரியாக கடமையாற்றிய டாக்டர் செல்வி அரியமலர் கொழும்பு அரசினர் வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (இ)

## நாடகப்போட்டியில் வெற்றி

[யாழ்ப்பாணம்]

உடுவில் வட்டாரங்களுக்கான பாடசாலை நாடகப் போட்டியில் மானிப்பாய் இந்துக்கல்லூரி முதலிடம் பெற்றுள்ளது. இப்போட்டி இராமநாதன் கல்லூரியில் நடைபெற்றது.

வெற்றிபெற்ற நாடகமான "நெஞ்சுக்கு நீதி" இம் மாதம் 19, 20 ந் திகதிகள் யாழ். இந்துமகளிர் கல்லூரியில் நடைபெறவிருக்கும் யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான நாடகப் போட்டியில் மேடையேற்றப்படவுள்ளது. (கெ-அ)

# பெண்ணின் மர்ம மரணம்கொலையா?

[யாழ்ப்பாணம்]

கிணறு ஒன்றிற்குள் இருந்து பெண் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கோப்பாயைச் சேர்ந்த சிவக்கொழுந்து பிள்ளைபொடி என்ற 48 வயது பெண்ணின் சடலமே இவ்வாறு கண்டெடுக்கப்பட்டதாகும்.

இம்மர்ம மரணம் பற்றி கோப்பாய் பொலிஸார் தீவிர புலன் விசாரணையில் இறங்கியுள்ளனர்.

சிலதினங்களுக்கு முன் கந்தஷ்டி விரதமிருந்த காலஞ்சென்றவர் இரவு உணவிற்காகத் தன் சகோதரி வீடு சென்றதாகவும் அச்சமயம் அவர் நகைகள் அணிந்திருந்தார் என்றும் நீண்ட நேரமாகியும் அவர் வராததுகண்டு அவரைத் தேடியபோது அவர் மாயமாக மறைந்து விட்டதாக கூறப்படுகின்றது.

தீவிர தேடுதலின் பின்னர் சிலதினங்களின் இவரது சடலம் அருகிலுள்ள கிணறு ஒன்றில் கிடக்கக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. எனினும் இவரது நகைகள் எதுவும் இவர் உடம்பில் இருக்கவில்லை என்றும் தெரியவருகிறது.

இவரது மரணம் தொடர்பான விசாரணையை மரண விசாரணை அதிகாரி திரு. அமிர்தலிங்கம் நடாத்தினார். (கா)

## சமய தீட்சை

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் வழமைபோல் இந்த ஆண்டும் ஐப்பசிக் கடைசி வெள்ளி அன்று சமய தீட்சை வைபவம் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. பாடசாலை மாணவர் பலருக்கும் அண்மையில் உள்ள பெற்றோர் சிலருக்கும் சாமிநாதக் குருக்களின் புத்திரன் பஞ்சாட்சரக்குருக்களால் இத்தீட்சை அளிக்கப்பட்டது. (அ)

# பனைவெல்லத்தை அரசே கொள்வனவு செய்யவேண்டும்

## உற்பத்தியைப் பாதுகாக்க இதுவேவழி என்கிறார் ராஜலிங்கம்

[யாழ்ப்பாணம்]

"வடபகுதியில் உற்பத்தி செய்யப்படும் பனை வெல்லங்களை அரசே கொள்வனவு செய்து சந்தைப்படுத்துவதன் மூலம் இத்தொழிலின் எதிர்காலத்தைப் பாதுகாக்க முடியும்."

இவ்வாறு நேற்றுக் காலை யாழ்ப்பாண மாநகர தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்க மேல்மாடியில் சமாஜத் தலைவர் திரு. ஞா. நல்லையா தலைமையில் இடம்பெற்ற கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றிய உடுப்பிட்டித் தொகுதி தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு த. இராஜலிங்கம் கூறினார்.

அவர் தொடர்ந்து தமதுரையில் கூறியதாவது;

'இத்தொழிலில் தற்போது 19 கூட்டுறவுச் சங்கங்கள் ஈடுபட்டுள்ளன. இவற்றின் உற்பத்தியை அதிகரிப்பதோடு இவற்றை அபிவிருத்தி செய்வதற்கு நிர்வாகம் புனரமைக்கப்பட்டு புதிய வரிவிதிப்பின்கீழ் சங்கங்கள் இலாபகரமாக இயங்குவதற்கு உயர் அதிகாரிகளைக் கொண்ட மகாநாடு ஒன்று விரைவில் கூட்டப்பட்டு கடந்த காலங்களைப்போலன்றி சிறப்பான முறையில் செயற்படுத்தப்படவேண்டும்.

இத்தகைய நடவடிக்கைகளுக்காக கருத்துரை வழங்கியவர்களின் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் ஏற்றுக்கொள்வது இவ்வபிவிருத்திக்கு ஏற்றதாகும். தொடர்ந்து 6 மாதம் சங்கங்களில் கடமையாற்றிய சகல ஊழியர்களது பதவிகளும் நிரந்தரமாக்க அரசு தீர்மானித்திருப்பது மகிழ்ச்சிக்குரியது. மேலும் இத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு அரசுடன் இணைந்து என்னாலான முழு ஆதரவையும் அளிப்பேன்.'

தெங்கு பனம்பொருள் ஊழியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. வி. ஜி. தங்கவேல் பேசுகையில் "சீனிவிலையை அரசாங்கம் குறைத்துள்ளமையினால் எமது பனை வெல்லத்தொழிலைநம்பிவாழ்ந்துவரும் தொழிலாளர்களுக்குஏற்படும்கஷ்டம் தவிர்க்கமுடியாததாயினும் பனை வெல்ல உற்பத்தியில் விஞ்ஞான தொழில் நுட்ப ஆலோசனைகளை நடைமுறைப்படுத்துவதன்மூலம் இத்தொழிலை மேலும் அபிவிருத்தி செய்து தொழிலாளர்களைப் பாதிக்காத முறையில் குறைந்த விலைக்கு பனம் சீனியை உற்பத்தி செய்யலாம். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை உடுப்பிட்டித் தொகுதி தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் மேற்கொள்ளவேண்டும்" எனக் கேட்டுக்கொண்டார்.

ஆசிரியர் திரு. க. நடராஜா, திரு. சுந்தரமூர்த்தி ஆகியோரும் உரையாற்றினர்கள். (கா. இ)

# பீக்ஸும் நாணயப் பெறுமதி இறக்கமும்

1968-ம் ஆண்டு தொடக்கம் பீக்ஸ்' திட்டம் இலங்கையில் இருந்தது. அந்நியச் செலாவணிச் செலவைக் குறைப்பதற்காக, சில இறக்குமதிப் பொருட்களுக்கான அந்நிய செலாவணிப் பேர்மிட்டுக்கு 65 சத வீத வரி அறவிடப்பட்டது. அதனால் பீக்ஸுக்குட்பட்ட இறக்குமதிப் பொருள்களின் விலை 65 சத வீதம் உயர்ந்தது.

உதாரணமாக 1000 ரூபா பெறுமதியான ஒரு தையல் மெஷினை இறக்குமதி செய்வதற்கு 650 ரூபா 'பீக்ஸா'க கொடுத்து அந்நிய செலாவணிப் பேர்மிட் பெறவேண்டியிருந்தது. இதனால் 'பீக்ஸு'டன் இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு நுகர்வோர் 65 சத வீதம் கூடுதலான விலை கொடுக்கவேண்டியிருந்தது.

தொகையில் 'குறைவு' ஏற்படலாம் என்று அஞ்சலாம்; இது நடக்காது. ஆனால் நாணயப் பெறுமதி இறக்கம் 65 சத வீதம் குறைய இருந்தால், அந்தக் குறைந்த வீதத்துக்குரிய பெறுமதியை இழக்க வேண்டிவரும்.

சென்ற சில ஆண்டுகளாக உலக வங்கி, இலங்கை நாணயத்தில் வெளிநாட்டுப் பெறுமதியை 'பீக்ஸ்' வீத அளவுக்கு 65 சத வீதம் குறைக்குமாறும், 'பீக்ஸை' நீக்குமாறும், உணவு மானியத்தை நீக்குமாறும் கேட்டுவந்தது. இலங்கையில் நாணயத்தின் உள்நாட்டுப் பெறுமதி இப்போது மிகவும் குறைந்துவிட்டது. 1940 முதல் 1977 வரை உள்நாட்டு நாணயப் பெறுமதி ரூ. 2000, 3000 குறைந்துள்ளது. ஆனால் வெளிநாட்டுப் பெறுமதி அவ்வாறு குறையவில்லை.

## ஆ. பொன்னம்பலம் பி, ஏ.

இதைவிட ஒய்வூதியம் வெளிநாட்டு நண்பரின் உதவிப் பணம் பெறுவோர், அந்நியச் செலாவணியை உழைத்துத் தருவதால் 65 சத வீத 'பீக்ஸ்' உதவிப்பணத்தை அரசாங்கத்திடமிருந்து கூடுதலாகப் பெறமுடிந்தது. மலாயா 'பென்ஷனி'யர் ஒருவர் 1000 ரூபா மலாயாப் பென்ஷன் பெற்றால் இலங்கை அரசாங்கம் 650 ரூபா கூடுதலாக 'பீக்ஸ்' பணம் கொடுக்கும். வெளிநாட்டிலிருக்கும் உறவினர்கள் நண்பர்களிடம் பணம் பெறுபவரும் இவ்வாறு 35 சத வீதம் கூடுதலாகப் பெற்றனர்.

இலங்கையின் வெளிநாட்டு நாணயப் பெறுமதியை 65 சத வீதம் குறைத்ததால், மலாயா பென்ஷனியரும், வெளிநாட்டுப் பணம் பெறுவோரும் தாம் பெற்ற முழுத்

1940 ல் (யு. கே) பவுண் 13-50 ரூபா சதமாகவும் 1977 ல் பவுண் 15 ரூபா 40 சதமாகவுமுள்ளது, உலக வங்கி உள்நாட்டுப் பெறுமதி குறைந்த அளவுக்கு, வெளிநாட்டுப் பெறுமதியைக் குறைக்குமாறு கேட்டது.

65 சத வீதம் குறைத்தால், மலாயா 'பென்ஷன்'மாரும் வெளிநாட்டுப் பணம் பெறுவோரும் நஷ்டமடையமாட்டார்கள். ஆனால் நாணயப் பெறுமதி இறக்கம் நடந்தால், குறைந்த வீதமான நஷ்டமடைவார்கள்.

இதைவிட, முன்பு 'பீக்ஸு'டன் இறக்குமதி செய்யப்பட்ட பொருள்கள் நாணயப் பெறுமதி 65 சத வீதம் இறக்கப்பட்டால், விலை குறையாது. நாணயப் பெறுமதி 65 க்குக் குறைய இறக்கப்பட்டால் குறைந்த வீதமான விலை குறையும். முன்பு 'பீக்ஸ்' இன்றி இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் நாணயப் பெறுமதி இறக்கத்தளவு வீதம் விலை கூடும். ஆகவே 'மலாயா பென்ஷ'னரும், வெளிநாட்டிலிருந்து உதவிப்பணம் பெறுவோரும் பயப்படவேண்டியதில்லை.

## நாடகத்தமிழுக்கு எழுச்சியூட்டியவர்

நடுநிலைமகாநாட்டின் போது நம்தமிழ் இளைஞர்கள் சிறையில் உண்ணா நோன்பு மேற்கொண்டவேளையிலே அவர்களுக்காக ஈச்சமோட்டையில் உண்ணா நோன்பிருந்து நோயில் வீழ்ந்து அதன் விளைவாகத் தன்னுயிர் இழந்த இணையற்ற தமிழ்மகன் ம. பாக்கியநாதர் ஆசிரியர்.

தமிழர்களுக்கு மட்டுமல்ல முத்தமிழின் ஓர் அங்கமாம் நாடகத்தமிமிழுக்கு எழுச்சியூட்டியவர் பாக்கியநாதர்.

1937-ம் ஆண்டு கார்த்திகை 2-ம் நாள் ஆவேசுமனுவேற்பிள்ளை -ஞானப்பிரகாசம் அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனாகப் பிறந்த பாக்கியநாதர். சம்பத்திரிசியார் கல்லூரியில் உயர்கல்விகற்று ஆசிரியராக வாழ்வைத் தொடங்கினார்.

புதுக்குடியிருப்பு இவரது வழி நடாத்தலினால் புத்துயிர் பெற்றது. உதயசூரியன் நாடக மன்றத்தை இவர் அங்கு அமைத்தார். இது இன்று வவனியா- முல்லைதீவு மாவட்டத்தில் இலக்கிய மணம் பரப்பி வருகின்றது.

ஈச்சமோட்டை கதிரொளி மன்றத்தின் காப்பாளராகத் திகழ்ந்து வானொலியிலும் மேடையிலும் பலபுதுமைகளைச் செய்தார். நல்லூர் தெற்கு சனசமூக நிலைய நாடக ஆசிரியராகத் திகழ்ந்து பலநல்ல படைப்புகளைபடைத்தளித்தார். மாத்தளை, உரும்பிராய், நாவாந்துறை ஆகிய இடங்களில் ஆசிரியராக நற்பணிபுரிந்த இவரின்சேவை குருநகர் புனித ஜேம்ஸ் வித்தியாலயத்திற்கும் கிட்டியது.

இவர் 1976 கார்த்திகைத் திங்கள் 19-ம் நாள் மாரடைப்பால் மக்களிடம் இருந்து பிரிக்கப்பட்டார்.

—ச. வாமதேவன்

## இன்று நூல் ஆய்வரங்கு

(யாழ்ப்பாணம்)

காவலூரர் எஸ். ஜெகநாதனின் கலட்டுத்தரை" நூல் ஆய்வரங்கு இலங்கைப் பல்கலைக்கழக தமிழ் இலக்கிய மன்றத்தினால் யாழ் வளாக இராமநாதன் மண்டபத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் நடைபெறுகிறது.

விழாவில் கலாநிதி, அ. சண்முகதாஸ், திருவாளர்கள் சுப்பிரமணியம், முத்து. இராசரத்தினம், கணபதி கணேசன் இ. ஓங்காரமூர்த்தி ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவர். (கெ-இ)

## தொலைபேசி சீரானது

[யாழ்ப்பாணம்]

அத்தியடி உப தபால் நிலையத் தொலைபேசி சீர்செய்யப்பட்டுள்ளது. கடந்த மூன்று வாரங்களாகச் சீர்குலைந்திருந்த இத்தொலைபேசியினால் இப்பகுதிப் பொதுமக்கள் பெரிதும் கஷ்டமடைந்திருந்தனர் இவ்வுபதபால் நிலையத்தின் தொலைபேசி சீரடைந்த போதிலும் இத் தபால் நிலையத்திற்கு வெளியேஉள்ள தபால் பெட்டி உடைந்த நிலையிலேயே உள்ளது. இதனால் பிற்பகல் 3மணிக்குப்பின் இத் தபால் பெட்டியில் தபால் சேர்க்க முடியாமல் மக்கள் அவதிப்படுகின்றனர். (கி அ)

மனோஹரா (யாழ் நகர்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி கணேசன்-ஜெமினி கணேசன்
சுப்பையா - லக்ஷ்மி - நிர்மலா
நடிக்கும்
சுஜாதாவின்
உனக்காக நான்
(ஈஸ்ட்மன் கலர்)

றியோ (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
மாலாசிங்க - சன்ஜே
தில்லகி
(ஹிந்தி)

பூலோலி சினிமாஸ் (பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-30
எம். ஜி. ஆர்-லதா
உழைக்கும் கரங்கள்

கடைசி வாரம்
ராணி (யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர் - பத்மினி - லக்ஷ்மி
முத்துராமன் - நாகேஷ் - சச்சு
தினசரி காலை 10-30, பிற்பகல் 2-30, 6-30 9-30
தேவரின்
பெண் தெய்வம்

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு பி. ப. 2-30
முத்துராமன்-சுஜாதா
வாழ்ந்து காட்டுகிறேன்

வெலிங்டன் (யாழ் நகர்) தினசரி 4 காட்சிகள்
துணிவே துணை

லிடோ (யாழ். நகர்) எம். ஜி. ஆர். — லதா நடித்த
போன்: 7693
நீதிக்கு தலைவணங்கு

4-வது வாரம்
வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 2-30, 6-30, 9-30
எம். ஜி. ஆர்.
உலகம் சுற்றும் வாலிபன்
(கலர்)

6-வது வெற்றி வாரம்!
ராஜா- யாழ்நகர்
தினசரி 10-30, 2-15, 6-15, 9-45
கே.எஸ்.கோபாலகிருஷ்ணனின் அற்புதப் படைப்பு
ஜெமினி, ஜெயசித்திரா கே. ஆர். விஜயா நடித்த
தசாவதாரம்
(கலர்)
(கண்ணபிரானின் பத்து அவதாரங்கள்)
[பாடசாலை மாணவர்கள் முன்கூட்டியே ஆசனங்களைப் பதிவுசெய்துகொள்ளலாம்]


யாழ். வின்ஸர் வெண் திரையில்
தென்னகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிச் சித்திரம்
தொடர்ந்து பாலசந்தரின் பல வெற்றிப் படங்களை அள்ளி வழங்கிய
யாழ். வின்ஸர் ஸ்தாபனத்தாரின்
மற்றுமோர் வெற்றிச் சித்திரம்
★ கமலஹாசன் ★ ரஜனிகாந்த்
★ எம். எஸ். விஸ்வநாத் ★ ஸ்ரீதேவி
★ ஒய். விஜயா ★ அநுபாமா
R. M. S. புரொடக்ஷன்ஸ் அளிக்கும்
K. பாலசந்தரின்
மூன்று முடிச்சு
தயாரிப்பு: R. வெங்கட்ராமன் R. M. சுப்பையா
இசையமைப்பு: M. S. விஸ்வநாதன்
திரைக்கதை, வசனம், டைரக்ஷன் கே. பாலசந்தர்.


# இன்று வடபகுதி நெறியாளர் மாநாடு

(நெல்லியடி)

வடபகுதியில் ப. நோ. கூ. சங்கங்களின் இயக்குனர்களைக் கொண்ட மாநாடு இன்று சனிக்கிழமை காலை 7 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டில் சகல இயக்குனர்களையும் கலந்துகொள்ளுமாறு ஸ்ரீலங்கா தேசியக் கூட்டுறவு மாவட்டசபைச் செயலாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேற்படி மாநாட்டில் கூட்டுறவுப் பணியாளர் ஆணைக்குழுவின் தலைவர், செயலாளர் ஆகியோரும் சமுகமளிப்பார்கள்.

மேற்படி மாநாட்டில் கூட்டுறவு ஆணைக்குழு பற்றிய கருத்துப் பரிமாறல்கள் நடைபெறுவதுடன் கஷ்டங்கள் பற்றியும் கலந்துரையாடப்படும். (க)

ஆசிரிய நியமனம்:

## 20 பேர்களை எம். பிக்கள் சிபார்சு செய்வார்கள்?

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஜனவரி மாதத்தில் வளங்கப்படவிருக்கும் ஆசிரிய நியமனங்கள் புள்ளி அடிப்படையிலேயே நிகழவுள்ளது.

விண்ணப்பங்கள் அனைத்தும் புள்ளிகளுக்கு ஏற்ப தரம்பிரிக்கப்பட்டு தொகுதிககு சுமார் 50பெயர்கள் தெரிவு செய்யப்படும் என்றும் இப் பெயர்களில் இருபது பெயர்களை சிபார்சு செய்யும்படி இப்பட்டியலை எம்.பிகளுக்கு கல்வி அமைச்சு அனுப்பி வைக்குமெனவும் தெரிய வருகிறது.

சுமார் 5இலட்சம் விண்ணப்பங்கள் கல்வி அமைச்சுக்கு கிடைத்துள்ளன என்றும் இதில் ஒரு இலட்சம் தமிழ் விண்ணப்பங்கள் என்றும் அறியப்படுகிறது.

பாலர் வகுப்புகளுக்கு அடுத்த ஆண்டுமுதல் பெருமளவு பிள்ளைகள் அனுமதிக்கப்படுவதால் பாலர் வகுப்பு ஆசிரியர் பற்றுக்குறை உள்ளதெனவும் இதனை ஈடுசெய்யக் கூடிய முறையில் ஆசிரிய நியமனம் வழங்கப்படுமெனவும் கூறப்படுகிறது.

சுமார் 300 ஆசிரியர்களை ஜனவரி முதல் அரசு நியமிக்க விருப்பது வாசகர்கள் அறிந்ததே. (கி)

வவனியா பாடசாலை:

## கட்டடவேலைகள் 45நாட்களில் பூர்த்தியாகும்!

(வவனியா)

வவனியாத் தொகுதியில் 9 பாடசாலைக் கட்டிடங்களுக்காக பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தில் 3 லட்சத்து 25 ஆயிரம் ருபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இக்கட்டிட வேலைகளை ஒன்றரை மாதத்திற்குள் முடித்துவிடுவதாக வவனியா கல்விப் பகுதியினர் பொறுப்பேற்றுள்ளனர்.

இப்பணம் 77-ம் ஆண்டு வவனியா நிறைவேற்று பொறியியலாளர்பகுதிக்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டு, வேலைகள் நடைபெறுததினால், திருப்பி அனுப்பப்படவிருந்தது.

வவனியா கல்விப்பகுதியினர் தலையிட்டு, தாங்கள் இப் பணத்தை ஒன்றரை மாதத்திற்குள் செலவிட்டு, பாடசாலைக் கட்டடங்களைக் கட்டுவதாக உறுதியளித்தனர்.

பாடசாலை பெற்றோர்-ஆசிரியர் சங்கங்கள் இவ்வேலைகளைப் பொறுப்பேற்று செய்துவருகின்றன. (க).


Regal (Jaffna)
French Film Festival
Daily at 4-45 7 & 9-30 P. M. only
WOMAN AT HER WINDOW
21-11-77 MONSIEUR PAPA
23-11-77 COUSIN COUSINE

சாந்தி (யாழ். நகர்) போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
கே. பாலசந்தரின்
சொல்லத்தான் நினைக்கிறேன்
(புதியபிரதி)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
கடைசி வாரம்
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
சிவகுமார்-சுஜாதா-ஸ்ரீகாந்த் நடித்த
அன்னக்கிளி
24ம் திகதி முதல்
தாயைக் காத்த தனயன்

## மணிவாக்கு

"அவசரப்படுபவர் திகைத்துக் கலங்குவர். ஆறி அவதானமாகக் காரியங்களைச் செய்வோர் அமைதியாகவிருப்பர்" இதனுண்மையை ஒவ்வொருவனும் காண்பர்.

—காந்திமகான்.

ஈழநாடு
The Eelanaadu

## சதாத்தின் இஸ்ரேலிய விஜயம்

எகிப்திய அதிபர் அன்வர் சதாத் இன்று இஸ்ரேலுக்கு விஜயம் செய்யவிருக்கிறார். இது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

அரபு மக்களின் நிலையை இஸ்ரேல் ஆட்சிமன்றத்துக்குச் சென்றும் எடுத்துக் கூறத் தயார் என்று எகிப்திய அதிபர் தெரிவித்ததைத் தொடர்ந்து இஸ்ரேல் பிரதமர் பேகினும் எகிப்திய அதிபரை வரவேற்கத் தயார் என அறிவித்தார்.

அறிவிப்புடன் மட்டும் நின்றுவிடாமல் இஸ்ரேலிலுள்ள அமெரிக்கத் தூதரகம் மூலம் எகிப்திய அதிபருக்கு அழைப்பும் விடுத்தார் பேகின். எகிப்திய அதிபரும் இந்த அழைப்பை ஏற்றுக்கொண்டார். இன்று இஸ்ரேல் செல்லும் எகிப்திய அதிபர் இரண்டு தினங்கள் அங்கு தங்கியிருப்பார். சகல அரச மரியாதைகளுடனும் எகிப்திய அதிபருக்கு வரவேற்பு அளிக்கப்படவிருக்கிறது. இஸ்ரேலின் ஆட்சிமன்றக் கூட்டத்திலும் திரு. அன்வர் சதாத் உரை நிகழ்த்துவார். அரபு மக்களின் நிலையை அவர் எடுத்துக் கூறவிருக்கிறார்.

திரு. சதாத்தின் இஸ்ரேலிய விஜயம் அரபு நாடுகளில் பலத்த கண்டனத்தை ஏற்படுத்தியிருக்கிறது. எகிப்தில் கூட எதிர்ப்புக் கிளம்பியிருக்கிறது. எகிப்திய வெளிநாட்டமைச்சர் திரு பௌமி தமது பதவியை ராஜினாமாச் செய்திருக்கிறார். பதில் வெளிநாட்டமைச்சராக நியமிக்கப்பட்ட திரு. மொகமத் றியாத்தும் சில மணி நேரத்துக்குள்ளேயே ராஜினாமாச் செய்திருக்கின்றார்.

இஸ்ரேலுக்குப் புறப்படுவதற்கு முன்னர் சிரியா அதிபருடன் எகிப்திய அதிபர் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார்.

மத்திய கிழக்குப் பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்கு ஜெனிவா மகாநாட்டை மீண்டும் கூட்டுவதிலுள்ள முட்டுக்கட்டையை நீக்குவதே அதிபர் சதாத்தின் நோக்கமாகும்.

மத்திய கிழக்குப் பிரச்னை அரபு நாடுகளுக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலுள்ள நேரடிப் பிரச்னை. இதில் வல்லரசுகள் தலையிட்டுத் தமக்குள் பலப் பரீட்சை பார்த்ததே இது தீராத பிரச்னையாக வளர்ந்ததற்கு முக்கிய காரணமென்று சொல்லலாம்.

இந்த நிலைமையை மாற்றி அமைக்கக்கூடிய வகையில் எகிப்திய அதிபரின் இஸ்ரேலிய விஜயம் அமையும் என் எதிர்பார்க்கலாம்.

# இரசிகமணியின் நல்வழி

## எதிர்காலத்தினரை வழிநடத்தும்

### இரங்கலுரையில் அம்பிகைபாகன்

[யாழ்ப்பாணம்]

இரசிகமணி கனகசெந்திநாதன் பண்டிதமணி மரபில் வந்த ஓர் எழுத்தாளன். சிறந்த சிறுகதை ஆசிரியன்; சிறந்த நாவலாசிரியன்; சிறந்த கட்டுரையாளன்; குறிப்பாகச் சிறந்த விமர்சகர். அவர்வழி நல்வழி. அவர் விட்டுச் சென்றவழிஎதிர்காலத்தினரை வழிநடத்தும்"

இவ்வாறு அமரர் இரசிகமணி கனகசெந்திநாதனின் இறுதிச் சடங்கின்போது யாழ். வைத்திஸ்வரக்கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு. ச. அம்பிகைபாகன் இரங்கலுரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

'ஈழத்துப் பேனா மன்னர்கள்' என்ற வரிசையில் அந்நாளில் 'ஈழகேசரி'ப் பத்திரிகைமூலம் தம்மைப்போன்ற பலரை ஈழத்திற்கு மட்டுமன்றித் தமிழ்கூறும் நல்லுலகிற்கே அறிமுகம் செய்து வைத்த பெருந்தன்மைவாய்ந்த பெரியார் இர்சிகமணி என்றும் திரு. அம்பிகைபாகன் கூறினார்.

மானிப்பாய்.தொகுதிஎம்.பி. திரு. வி. தர்மலிங்கம் பேசுகையில் இரசிகமணி தமது வாழ்நாளில் தமிழ்மொழிக்கு ஆற்றியதொண்டு அநேகமென்று கூறித் தமது சார்பிலும் காங்கேசன்துறைத் தொகுதிப் பிரதிநிதி திரு. அ. அமிர்தலிங்கத்தின் சார்பிலும் இரசிகமணியின் குடும்பத்திற்கு அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டார்.

"சமூகம் ஒரு சிறந்த தொண்டனை இழந்துவிட்டது; இலக்கிய உலகம் ஒரு சிறந்த இலக்கியகர்த்தாவை இழந்துவிட்டது; அவரது குடும்பம் ஒரு சிறந்த தலைவனை இழந்துவிட்டது" என்று திரு. தர்மலிங்கம் எம். பி. மேலும் சொன்னார்.

எழுத்தாளர் திரு. கே. டானியல் பேசுகையில் எழுத்தாளர்கள் எந்த அணியினராயிருந்தாலும் அவர்களை எழுத்தாளன் என்ற முறையில் கௌரவித்தவர் இரசிகமணி என்றும் ஈழத்து தமிழ் எழுத்தாளர்களைப் பிறர் மதிக்கச் செய்தவர் அவர் என்றும் கூறினார். இறுதிமூச்சு இருக்கும்வரை அவர் மரணத்தைப் பற்றிக் கவலைப்படாதிருந்தாரென்றும் அவர் சொன்னார்.

'மல்லிகை' ஆசிரியர் திரு. டொமினிக்ஜீவா பேசுகையில், "எழுத்தாளர்கள் அனைவரையுமே அவர்கள் எந்த அணியினராயிருந்தாலும் மதிக்கின்ற பெரும்பண்பு இரசிகமணியின் சிறப்பியல்பாயிருந்தது. எந்த எழுத்தாளரையும் அவர் தமது இல்லத்தில் உபசரிக்கும்விதமே அலாதி. அவர் குடும்பமும் அவருக்கு அப்படி வாய்த்தது" என்றார்.

'செங்கை ஆழியான்', 'செம்பியன் செல்வன்' 'ஈழநாடு' பதில் ஆசிரியர் திரு எம். கோபாலரத்தினம், யாழ். வளாகத் தமிழ்த்துறை தலைவர் கலாநிதி அ. சண்முகதாஸ் உட்பட மற்றும் பலரும் இரங்கலுரை நிகழ்த்தினர்.

கவிஞர்கள் வே. ஐயாத்துரை, சாரதா ஆகியோர் இரங்கற்பா பாடினர். (அ)

## என். சி. ஜி. ஈ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கேள்விகளுக்கும் சரியான பதிலை ஆயத்தம்செய்துவந்துள்ளார்கள். இம்மாதம் 17-ம் திகதி மாலை நடந்த பரீட்சைக்குரிய வினாத்தாளும் இப்படியே முன்கூட்டி வெளிவந்துள்ளது. இவற்றை நிரூபிக்க தயாராக இருக்கின்றேன். எந்த அதிபரிடமும் இதுபற்றி விசாரிக்கலாம்.

நேற்று நடந்த கணிதவினாத்தாளும் முன்கூட்டியே வெளிவந்துள்ளது.

கல்விஇலாகா தேசிய கல்வி பொதுத்தராதரப்பரீட்சையை ரத்துசெய்துவிட்டதால் இப்பரீட்சை முக்கிய இடத்தைப் பெறுகிறது. வினாத்தாள் வெளிவந்தபின் இப்பரீட்சை பயனில்லாததாகிவிட்டது.

ஆதலால் இப் பரீட்சையை ரத்துச்செய்யுமாறும் பரீட்சைக்குரிய பணத்தை திருப்பி மாணவர்களுக்கு வழங்குமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

அத்துடன் 9-ம் வகுப்பு மாணவர்களுக்கான வகுப்பேற்றப் பரீட்சையை அந்தந்தப் பாடசாலைகள் நடாத்த அனுமதி வழங்கவும்.

இக் கடிதத்தின் பிரதி வடமாகாண அதிபர்கள் சங்கத்திற்கும் அனுப்பப்பட்டுள்ளது. (ஈ-இ)

## இன்று மத்தியஸ்தர் கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் இன்று யாழ். இந்துக்கல்லூரியில் உதைபந்தாட்ட புதிய விதிகளைப் பற்றிய ஐந்து நாள் கருத்தரங்கொன்றை நடாத்துகின்றது.

உலக உதைபந்தாட்டச் சங்கம் உதைபந்தாட்டப் போட்டியில் புதிய விதிமுறைகளை அறிவித்திருந்தது. இந்த புதிய விதிமுறைகளை வடமாகாணத்திலும் அறிமுகம் செய்து வைக்கும் நோக்குடனே மேற்படி கருத்தரங்கை உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களிடையே நடாத்தப்படுகின்றது.

இக்கருத்தரங்கை யாழ். மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தலைவர் திரு. ஈ. கனகலிங்கம் ஏற்பாடு செய்துள்ளார்.

## நேர்மைமிக்க வழக்கறிஞர் அமரர் மா. செல்வத்தம்பி



எனது மதிப்பிற்குரிய திரு. செல்வத்தம்பி அவர்கள் ஒரு மாத காலத்துக்கு முன்னர் தான் காலமானாரெனினும் அவர், பழைய ஒரு பரம்பரைக்கு உரியவர். அதாவது, கண்ணியமும் நேர்மையும் பண்பாடும் மிக்க தமிழ் வழக்கறிஞர்கள் பலரைத் தோற்றுவித்த அந்தப் பெரும் பரம்பரைக்கு உரியவர். இந்தப் பரம்பரையினர், தாம் பிறந்த வடமாகாணத்தில் மட்டுமல்லாமல், மேல் மாகாணம், மத்திய மாகாணம், வடமேல் மாகாணம், வடமத்திய மாகாணம் ஆகிய இடங்களில் நிலவிய நீதிமன்றங்களையும் அலங்கரித்த பெருமைக்குரியவர்கள்.

திரு. செல்வத்தம்பி, ஏறத்தாழ ஐம்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் வழக்கறிஞராகத் தொழில்புரிய ஆரம்பித்தார். மாத்தளையில் வழக்கறிஞராகத் தொழில் தொடங்கிய இவருக்குப் பெரும் புகழும் தேடிவந்தன. வழக்காடுநர்களும் வழக்கறிஞர்களும் இவரை நாடி வந்தனர்.

இவரது மூத்த பிள்ளைகள் இருவரை 1920இல் ஹாட்லிக் கல்லூரியில் சந்தித்தேனெயினும், 1940-க்குப் பின்னர் தான் செல்வத்தம்பியைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அப்போது அவர் வவனியா, முல்லைத்தீவு ஆகிய இடங்களில் உள்ள நீதிமன்றங்களில் கொடிகட்டிப் பறந்து கொண்டிருந்தார். சில வருடங்கள் கழிய பின்னர் இந்தக் கொடி, அனுராதபுரம், பொலநறுவை ஆகிய இடங்களிலும் பட்டொளி விசிப்பறந்தது. வவனியாவில் இவர் சட்டத்தொழில் புரிந்த காலத்தில் அங்கே இவரைப் போலச் சட்டத்தொழில் புரிந்து கொண்டிருந்த இவரது மைத்துனரான வழக்கறிஞர் பசுபதிக்கும் இவருக்கும் இடையில் நீதிமன்றத்தில் நடைபெறும் சட்டச்சர்ச்சைகளும், வித்துவாண வேடிக்கைகளும் கண்டாரைக் கவர்ந்து, கேட்டோரைப் பிணிக்கும் சிறப்பு வாய்ந்தனவாக இருக்கும்.

செல்வத்தம்பி ஒரு கனவான், கடமையும் கண்ணியமும் மிக்கவர். கடமை பெரிதாக இருந்ததேயொழிய பணமும் பொருளும் அவருக்கு ஒருபோதும் ஒரு பொருட்டாக இருக்கவில்லை. கடவுளிலும் நேர்மையிலும் தர்மத்திலும் அசையாத நம்பிக்கை கொண்டிருந்தமையால், செல்வத்தம்பிக்கு வாழ்க்கையில் ஏற்பட்ட சில பலத்த அதிர்ச்சிகளை அவர், துணிச்சலுடனும் ஓர்மத்துடனும் சகித்துக் கொண்டார்.

பிறரையும் தன்னைப்போல் நேசித்த இவருக்கு இறைவன் நிறைந்த பிள்ளைச் செல்வத்தை நல்கியுள்ளார். பொறுப்புக்கள் பல இருந்தபோதும் தமது குடும்பக் கடமைகளை அவர் செவ்வனே நிறைவேற்றியுள்ளார் என்பது வியப்பிற்குரியது. கடவுள் அருளால் அவரது பிள்ளைகள் எல்லோரும் தன்னிலையில், உயர்ந்த பதவியில் உள்ளார்கள்.

தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தால் [பிள்ளைகளால்] காணப்படும் என்பதில் வழுவா நம்பிக்கை கொண்டவர்கள் இந்துக்கள். அவரது ஆத்மா சாந்தி அடைவதாக.

ஆர். பரமகுரு
[ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி)
தும்பளை,
பருத்தித்துறை.

## தமிழ் ஈழ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

த்தை நாமே கவனித்துக் கொள்வோம், உங்களிடம் உதவிக்கு வரமாட்டோம் என்றும் கூறினர்.

அப்படியான ஒரு கட்டத்தில்தான் உங்களுக்கு பொருளாதாரக் கஷ்டங்கள் விளங்கும் என்று நிதியமைச்சர் திரு. மெல் திரு. அமிரிடம் கூறினர். (இ-ம)

## விமானக் கட்டணம் உயர்ந்தது!

(யாழ்ப்பாணம்)

பட்ஜட் யோசனைகளைத் தொடர்ந்து, விமானக் கட்டணங்கள் அதிகரித்துள்ளன.

பலாலி-திருச்சி விமானக் கட்டணம் வருமாறு;

பலாலியிலிருந்து செல்வதற்குரிய விமானக் கட்டணம் ரூ. 341-00. இங்கிருந்து சென்று திரும்புவதற்கான கட்டணம் ரூ. 681-00.

முன்னர், இங்கிருந்து செல்வதற்கு ரூ. 250-50 சதமாகவும்; சென்றுதிரும்புவதற்கு ரூ. 499 95 சதமாகவும் இருந்தது.

விமானக் கட்டணங்கள் மீதான வி. மொ. வி. வரி ஐந்துசதவீதம் அதிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்தே கட்டணம் உயர்த்தப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

## உயர்மட்ட விசாரணை

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்புபல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த உயர் உத்தியோகத்தர்கள் சிலர் ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளருக்கு செய்யப்பட்ட புகாரை அடுத்து உயர்மட்ட விசாரணைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இது தொடர்பாக ஒரு அதிகாரி மீது ஏற்கனவே நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது.

## பொருளா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

### இனிப்பான பேச்சுக்கு......

வரவுசெலவுத்திட்ட உரையைத் திரு. மெல் பேரவையில் வாசித்தபோது பல அரசு எம். பிக்கள் கைதட்டி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். ஆனால் அந்த உரையின் இனிப்பான பூச்சுக்கு உள்ளே உள்ள கசப்பான மருந்து பற்றி அவர்கள் உணர்ந்திருப்பார்களாயின் நிச்சயம் அவர்கள் ஆரவாரித்திருக்கமாட்டார்கள். [இ]

## பட்ஜட்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசின் கொள்கைப்படி அதிக வேலைவாய்ப்பு அளிக்கக் கூடிய மகாவலித்திட்டத்திற்கும் அதிக முதலீடு செய்யக் கூடிய சுதந்திர வர்த்தக வலயத்திற்குமே அதிகபணம் ஒதுக்கப்பட்டுள்ளது.

பாவனைப் பொருட்களுக்கு மட்டுமே அதிகபணத்தைச் செலவிடமுடியாது. நாட்டின் அபிவிருத்தியே முக்கியமானது.

70 லட்சம் ஏழைமக்களுக்கு நிவாரணம் அளிக்கக்கூடிய விதத்தில் புதிய பட்ஜட் தயாரிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கும் ஏழைமக்களின் நல்வாழ்வுக்கும் இந்த பட்ஜட் உதவும் என்று அரசு திருப்தி கொண்டுள்ளது.

### வர்த்தகர்களுக்கு...

வர்த்தகர்களின் ஏகபோக உரிமைகளைத் தடுக்க அரசு சட்டம் கொண்டுவரும்.

வர்த்தகர்கள் லாபத்தை மட்டும் கருத்தில் கொள்ளாது மக்களுக்கு சேவையாற்றும் விதத்தில் நடந்துகொள்ள வேண்டும். [இ]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இவன்சோலை றேவீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ந் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelanaadu Telephone 389, Registerd as News paper in Sri Lanka;